# PROGRAMME IN SINHALA

## அடிப்படை சிங்கள நிகழ்ச்சித்திட்டம்

## 2017/2018

Department of Language Studies
Faculty of Humanities & Social Sciences
The Open University of Sri Lanka
Nawala
Nugegoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROGRAMME IN SINHALA

# அடிப்படை சிங்கள நிகழ்ச்சித்திட்டம்

## 2017/2018

Department of Language Studies
Faculty of Humanities & Social Sciences
The Open University of Sri Lanka
Nawala,
Nugegoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your teacher will explain the contents of this booklet to you in class on the first day of classes. Therefore please take this with you when you attend the first face-to-face session.

## PROGRAMME IN SINHALA

THIS PROGRAMME FOCUSES ON DEVELOPING THE FOUR MAJOR LANGUAGE SKILLS, VIZ. LISTENING, SPEAKING, READING AND WRITING AND ALSO THE APPROPRIATE USE OF GRAMMAR. THE PROGRAMME ALSO PAYS SPECIAL ATTENTION TO THE NEEDS OF EMPLOYEES IN THE GOVERNMENT SECTOR AND PRIVATE SECTOR WHO WISH TO IMPROVE THEIR COMMUNICATION SKILLS IN SINHALA, IN ORDER THAT THEY MAY FUNCTION MORE EFFICIENTLY AT THEIR PLACES OF WORK. A VARIETY OF EXERCISES, TASKS AND ACTIVITIES HAVE BEEN DESIGNED FOLLOWING THE COMMUNICATIVE METHOD OF LANGUAGE TEACHING. THIS HAS BEEN ESPECIALLY DESIGNED FOR THOSE WHOSE FIRST LANGUAGE IS TAMIL.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Programme in Sinhala consists of 02 courses.**

1. **Beginners' Course in Sinhala - LSC 0202**

2. **Basic Course in Sinhala**
   (i) **Basic Communication Skills - I LSC 1203**
   (ii) **Basic Communication Skills - II LSC 1204**

## COURSE DURATION


The duration of the course is two years.

- Beginners Course in Sinhala – One year
- Basic Course in Sinhala – One year



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Structure of the programme




Those who enter the Beginners' Course (LSC 0202) can on eligibility, join the Programme in Basic Sinhala (LSC 1203, LSC 1204). Students who successfully complete the programme in Basic Sinhala would be awarded a Certificate in Basic Sinhala.

## TEACHING METHODOLOGY

This programme has been designed for self-study and the course pack includes printed course materials which will be supplied to the students. To assist the learner, regular face-to-face sessions will also be conducted. Teaching sessions of 03 hours



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

duration will be held once a week during weekends at the Regional/Study Centre.

In addition to the course materials and guidance provided by the Open University, students will be expected to make use of radio broadcasts and television programmes.

## COURSE EVALUATION

At the Open University, Course assessment consists of 2 components.

a) Continuous Assessment (CA) and

b) Final Evaluation

The **CA component** for the Programme in Sinhala will consist of **03 Continuous Assessment Tests. You will have to score 40% or more at 02 of these Continuous Assessment Tests** in order **to gain eligibility to sit the final examination.**

The **marks scored at the CA tests also form a proportion of the final overall mark.**

**It is therefore in your interests, to present yourself for all 03 tests and to score as highly as possible in these tests.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The final examination consists of a written paper.**

**Please note that if you do not present yourself for at least 2 Continuous Assessment Tests, and gain the required marks, you will not be permitted to sit the Final Examination.**

## APPLIING FOR THE FINAL EXAMINATION

Students are required to send an online application for the final examination.

## REPEAT STUDENTS

If you fail to present yourself for 02 tests and thus fail to gain eligibility to sit the final examination, you are considered a Repeat Student.

Repeat students have to pay an enhanced fee when they re-register for the programme.

We therefore emphasise that you should make sure that you attend the face-to-face sessions and sit for **at least 2** tests so that you could complete the programme with no additional expense.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RE-SIT STUDENTS

If you gain eligibility but does not sit for the Final Examination or fail in the Final Examination, you are considered a Re-sit student. Re-sit students have to maintain their studentship in order to be called for the examination next year. (To maintain studentship you will have to pay a fee).

**Re-sit students cannot attend classes.**

## GROUP NUMBER

You are assigned to a group based on your performance at the grading test.

Lists giving the group numbers of the respective students will be exhibited on the notice boards of the Regional/Study/Teaching centres on the first day of classes. Please note down your group number from the lists in your centre and attend the classes accordingly. **Please note that you are not allowed to change the group to which you are assigned.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WITHDRAWING FROM THE PROGRAMME

If you wish to withdraw from a Programme you should write a letter and inform SAR/Student Affairs with a copy to Head/Dept. of Language Studies within two months (02) of Registration. Then you may be allowed to re-register for that Programme without being considered a repeat student. Please state your Registration Number and reason for withdrawal.

## STUDENT IDENTITY CARD

Do not forget to bring your Student's Registration Book whenever you come to your study centre or the Open University, Nawala.

It would also be advisable to carry your National ID card at all times.

## FUTURE COMMUNICATION

As most of the communication with you in future will be done through your Regional/Study/Teaching



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Centre you are advised to read any notices that might appear on the notice board in the Regional/study/Teaching Centre from time to time.

If you have any problems while following the course you could contact the following persons.

| NATURE OF PROBLEM | WHOM TO CONTACT | DIVISION |
|---|---|---|
| Registration, Studentship, Change of Centre | Senior Asst. Registrar Student Affairs Division. | Student Affairs Division, OUSL, Nawala, Nugegoda. |
| Withdrawal from a course | Senior Asst. Registrar<br><br>Head/Dept. of Language Studies | Student Affairs Division<br>Dept. of Language Studies OUSL, Nawala, Nugegoda. |
| Examination results, Certificates | Senior Asst. Registrar, Examination Division. | Examinations Division, OUSL, Nawala, Nugegoda. |
| Conduct of Classes, Books | Asst. Director/ Co-ordinator | Regional Centre Study Centre |
| Problems regarding eligibility. Any other problems | Co-ordinator Programme in Sinhala | Dept. of Language Studies, OUSL, Nawala , Nugegoda. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If you write to any of these officers please send a copy of such letters to the

**Programme Co-ordinator**
**Dept. of Language Studies**
The Open University of Sri Lanka
Nawala
**Contact No. 011 - 2881035**

**Or**

**Head**

**Dept. of Language Studies**
The Open University of Sri Lanka
Nawala

We hope you will work hard and complete the Programme that you have registered for






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படை சிங்கள பாடநெறி- 2017/2018

இக்கைந்நூலில் உள்ளவற்றை உங்கள் ஆசிரியர் முதலாவது நேருக்கு நேர் பாட நிகழ்வின் போது, விளக்குவார். ஆதலால் நீங்கள் வகுப்பறைக்குச் செல்லும் போது இக்கைந்நூலைக் கொண்டு செல்வது அவசியமாகும்.

இப்பாடத்திட்டம் செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு. எழுத்து என்னும் நான்கு அடிப்படை மொழித் திறன்களை விருத்தி செய்வதையும், இலக்கணத்தைப் பொருத்தமாக பிரயோகிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது. அரசாங்கத் துறையிலும், தனியார்துறையிலும் தமது அலுவலகங்களில் பணிபுரிவதற்கான சிங்கள மொழி தொடர்பாடல் திறன்களை மேம்படுத்த விரும்பும் உத்தியோத்தர்களின் தேவைகளை, இப்பாடத்திட்டம் விசேடமாகக் கருத்திற் கொண்டுள்ளது. தொடர்பாடல் முறையிலான கற்பித்தல் முறையினைப் பின்பற்றி பல்வகைப்பட்ட பயிற்சிகளும் செயற்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி மூலம்

சிங்களப் பாடநெறி 02 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. ஆரம்பப் பாடநெறி (LSC 0202)

2. அடிப்படைப் பாட நெறி

(i) அடிப்படைத் தொடர்பாடல் திறமைகள் I –LSC 1203

(ii) அடிப்படைத் தொடர்பாடல் திறமைகள் II –LSC 1204


## கற்கை காலம்

இப் பாடநெறி இரண்டு வருடங்களைக் கொண்டதாகும்

(i) ஆரம்பப் பாடநெறி – 01 வருடம்

(ii) அடிப்படைப் பாடநெறி – 01 வருடம்

## நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டமைப்பு



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் சிங்கள ஆரம்பப் பாடநெறியை (LSC 0202) பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை பெற்றிருந்தால் அடிப்படை சிங்களப் பாடநெறிக்கு (LSC 1203, LSC 1204) சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அடிப்படை சிங்கள பாடநெறியை திறமையாக பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

## கற்பிக்கும் முறை

இப்பாடநெறி சுயகற்றலுக்குரிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்றல் சாதனங்களாகப் பாடநூல்கள் கொடுக்கப்படும். மாணவர்களின் நலன் கருதி தொடர் நாட்பாடசாலைகள் நடாத்தப்படும்.

பிராந்திய/கற்கை நிலையங்களில் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நாட்பாடசாலைகள் வாராந்தம் நடாத்தப்படும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் கொடுக்கப்படும் பாட நூல்கள், வழிகாட்டல்கள் அத்துடன் வெவ்வேறு நாவல்கள், சஞ்சிகைகள், வானொலி தொலைக்காட்சி போன்றவற்றை பயன்படுத்துவது சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீடு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் பாடநெறியை மதிப்பிடும் பொருட்டு, கீழ்க் காணும் முறைகள் கையாளப்படும்,

1. பாடநெறி நடக்கும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான மதிப்பீடுகள்
2. இறுதி எழுத்துப் பரீட்சை

சிங்கள பாடநெறிக்கு மூன்று தொடர்மதிப்பீடுகள் நடாத்தப்படும் (CAT). இதில் குறைந்த பட்சம் இரண்டு தொடர் மதிப்பீடுகளுக்குத் தோற்றி 40% அல்லது அதற்குமேல் புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

தொடர் மதிப்பீட்டின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் (வீதம்) இறுதி முடிவு எடுக்கப்படும் போது பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால் தொடர் மதிப்பீடுகளில் தோற்றி உயர் புள்ளிகளை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

இறுதிப் பரீட்சை எழுத்துப் பரீட்சையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் குறைந்தபட்சம் இரண்டு தொடர் மதிப்பீடுகளில் பங்குபற்றி போதிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாவிடின் இறுதி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை உங்களுக்கு (Eligibility) கிடையாது.

## இறுதிப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

அனைத்து மாணவர்களும் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வருவழி (online) மூலமாக விண்ணப்பித்தல் கட்டாயமானதாகும்.

## மறுபடியும் பாடநெறியைக் கற்க விரும்பும் மாணவர்கள்

நீங்கள் இரண்டு தொடர் மதிப்பீடுகளுக்கு தோற்றி இறுதி பரீட்சைக்குத் தோற்ற தேவைப்படும் புள்ளிகளை கொண்டிரா விட்டால் மறுபடியும் பாடநெறியைத் தொடரும் மாணவர் ஆவீர்கள் (Repeat student)

அவ்வாறாயின் மறுபடியும் பாடநெறிக்கு கூடுதலான கட்டணம் செலுத்தி பதிவு செய்ய நேரிடும். ஆகையால் நீங்கள் கற்கை வகுப்புகளுக்கு ஒழுங்காக வருகை தந்து இரண்டு தொடர் மதிப்பீடுகளுக்குத் தோற்றி, கூடிய கட்டணம் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபடியும் தோற்றும் மாணவர்கள்

நீங்கள் இறுதி பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்ற போதும் அதற்குத் தோற்றாவிடில் அல்லது சித்தி பெறாவிடில் நீங்கள் மறுபடியும் தோற்றும் மாணவராக கருதப்படுவீர். அவ்வாறான மாணவர்கள் அவர்களுடைய மாணவ அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். மாணவ அங்கத்துவத்தைப் புதுப்பித்தவர்கள் அடுத்த ஆண்டில் பரீட்சைக்கு தோற்ற முடியும். மாணவ அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கு, கட்டணம் செலுத்தப்பட வேண்டும். மறுபடியும் தோற்றும் மாணவர்கள் வார இறுதி நாட்பாடசாலையில் கலந்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

## குழு எண்

தரப்படுத்தல் பரீட்சையின் போது நீங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளைக் கருத்திற் கொண்டு, நீங்கள் ஒரு குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.

வகுப்புகள் ஆரம்பமாகும் முதலாம் நாளில் நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள குழுவின் பட்டியல். பிராந்திய நிலையங்கள், கற்கை நிலையங்கள் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவில் நீங்கள் உங்கள் பாடங்களை கற்க வேண்டும். உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள குழுவில் இருந்து எக்காரணத்தைக் கொண்டும் வேறு குழுவிற்கு செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது. அதே போல், நேரஅட்டவணையில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு மாறாக வேறு தினம் மாற்றித் தரப்படமாட்டாது.

## பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ளல்

குறித்த பாட நெறியிலிருந்து தாங்கள் விலகிக் கொள்வதாயின் அது தொடர்பில் கடிதம் ஒன்றை பதிவு செய்த தினத்தில் இருந்து 02 மாதத்திற்குள் சிரேஷ்ட உதவி பதிவாளர்/மாணவர் தொடர்பாடல் பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிரதி ஒன்றை மொழித் திணைக்களத்திற்கும் அனுப்பவேண்டும்.

அப்போது நீங்கள் பாடநெறிக்கு மறுபடியும் பதிவு செய்யும் மாணவராக கருதப்படுவீர்கள். தயவு செய்து உங்கள் பதிவு இலக்கத்தையும், விலகிக் கொள்வதற்கான காரணத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

## மாணவர் அடையாள அட்டை

நீங்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அல்லது கற்கை நிலையங்களுக்கு செல்லும் போது மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு புத்தகத்தை கொண்டு செல்ல வேண்டும். அத்துடன் உங்களது தேசிய அடையாள அட்டையையும் கொண்டு செல்ல வேண்டும்.

## எதிர்காலத் தொடர்புகள்

சகல தொடர்புகளும் எதிர்காலத்தில் உங்கள் பிராந்திய கற்கை/நிலையங்களினூடாகவே நடாத்தப்படும். ஆதலால் நீங்கள் அடிக்கடி பிராந்திய/கற்கை நிலையங்களிலுள்ள அறிவித்தல்களைப் பார்வையிட வேண்டும்.

நீங்கள் பாடநெறியில் பங்குகொள்ளும் போது, ஏதாவது அறிவுறுத்தல் தேவையாயின் கீழ்காணும் நபர்களுடன் தொடர்பு கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| NATURE OF PROBLEM | WHOM TO CONTACT | DIVISION |
|---|---|---|
| Registration, Studentship, Change of Centre | Senior Asst. Registrar Student Affairs Division. | Student Affairs Division, OUSL, Nawala, Nugegoda. |
| Withdrawal from a course | Senior Asst. Registrar Head/Dept. of Language Studies | Student Affairs Division Dept. of Language Studies OUSL, Nawala, Nugegoda. |
| Examination results, Certificates | Senior Asst. Registrar, Examination Division. | Examinations Division, OUSL, Nawala, Nugegoda. |
| Conduct of Classes, Books | Regional Officer | Regional Centre Study Centre |
| Problems regarding eligibility. Any other problems. | Co-ordinator Programme in Sinhala | Dept. of Language Studies, OUSL, Nawala , Nugegoda. |

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு கடிதம் எழுதும் போது அதன் ஒரு பிரதியை கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பவும்

பாடநெறி ஒருங்கிணைப்பாளர்
கற்கை மொழித் திணைக்களம்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
நாவல , நுகேகொட
தொ . இல. - 0112881035



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது

துறைத் தலைவர்
கற்கை மொழித் திணைக்களம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட

நீங்கள் பதிவு செய்த பாடநெறியை சிறந்த முறையில் கற்பீர்கள் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

வாழ்த்துக்கள் !!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org